[1978 செப்டம்பர் 9

Seats for Anglo-Indian Community in Medical Colleges.

* 60 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. V. D'MONTE): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation regarding reservation of seats for the M.B.B.S. Degree Course in Medical Colleges, for candidates belonging to the Anglo-Indian Community; and

(*b*) if so, the action taken thereon ?

ஆங்கிலோ-இந்திய வகுப்பினருக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்): மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆங்கிலோ-இந்திய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்காக மருத்துவக் கல்லூரிகளில் எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்கு இடங்களை ஒதுக்குவது தொடர்பாக முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

(இ) நம் மாநிலத்திலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் முதல் வருட எம்.பி.பி.எஸ்., பட்டப்படிப்பு படிப்பதெற்கென 1,015 இடங்கள் இருக்கின்றன. அவைகளில் 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மலை வாழ் வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 50 சதவிகிதத்திற்கு மேல் ஒதுக்கீடு செய்வது இந்திய அரசியல் அமைப்புச் சட்ட 15(4) விதிக்குப் புறம்பானது ஆகும். ஆகவே ஆங்கிலோ-இந்தியர் உட்பட மற்ற இனத்தவருக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் ஒதுக்குவது என்பது இயலாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-40)